இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 274 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 01 – வியாழக்கிழமை 15 மே 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 274 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 01 - Thursday 15 May 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## எடப்பாடியின் அ.தி.மு.க. ஆட்சியில் நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் – சாகும் வரை

# அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட 9 பேருக்கு ஆயுள் தண்டனை!

## கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு!

**கோவை, மே 15 -**

**எடப்பாடியின் அ.தி.மு.க. ஆட்சியில் நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட 9 பேருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.**

**பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் நிவாரணம் வழங்கவும் நீதிபதி நந்தினி தேவி உத்தரவிட்டார்.**

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் நாட்டையே உலுக்கும் வகையில் அதிர்ச்சிகரமான ஒரு சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தது. அதாவது, கல்லூரி மாணவிகளை பாலியல் வன்கொடுமை செய்து, அதனை வீடியோ எடுத்து மிரட்டிய சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இளம்பெண்களைக் குறி வைத்து பாலியல் வன்கொடுமை செய்து, அதனை வீடியோவாக பதிவு செய்து மிரட்டிய கும்பலின் கொடூரம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது அரங்கேற்றப்பட்டது.

கோவை பொள்ளாச்சி வழக்கு இளம் பெண் ஒருவரின் புகாரின் மூலம் வெளிச்சத்துக்கு வந்தது. இது தொடர்பான வீடியோக்களும் வெளியாகி பெரும் அதிர்வலைகளை கிளப்பியது. 'அண்ணா அடிக்காதீங்க' என்ற இளம் பெண்ணின் அலறல் தமிழ்நாட்டையே குலுக்கியது. இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? என்று அனைவரும் கேள்வி எழுப்பினர்.

இந்த வழக்கின் விசாரணையை சி.பி.ஐ. விசாரித்தது. மேலும் இந்த வழக்கில் பொள்ளாச்சியைச் சேர்ந்த சபரிராஜன் (வயது 30), வசந்தகுமார் (32), சதீஷ் (33), மணிவண்ணன் (30), திருநாவுக்கரசு (30), ஹேரேன் பால் (34), பாபு என்ற பைக் பாபு (38), அருளானந்தம் (38), அருண்குமார் (36) என மொத்தம் 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு கோவை மகளிர் நீதிமன்றத்தில் சிறப்பு வழக்காக நடத்தப்பட்டு வந்தது. கைது செய்யப்பட்ட 9 பேரும் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கோவை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை முழுவதும் காணொலி முறையில் நடத்தப்பட்டு வந்தது. குற்றம் சாட்டப்பட்ட 9 பேர் மீதும் 2019 மே 21ஆம் தேதி கோவை மகளிர் நீதிம ன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் வழக்கின் விசாரணை தாமதம் ஆனதால், ஹைகோர்ட் உத்தரவையடுத்து, கோவை ஒருங்கிணைந்த கோர்ட் வளாகத்தில் தனியாக அறை ஒதுக்கி விசாரணை தொடங்கப்பட்டது.

இந்த வழக்கில் அரசுத் தரப்பு சாட்சி விசாரணை முடிந்ததையடுத்து, இதுதொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் கேள்விகள் கேட்பதற்காக, 9 பேரும் மகளிர் நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் 5 ஆம் தேதி ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த நிலையில், குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் தரப்பில் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் அனைத்து தரப்பு விசாரணைகளும் முடிந்த நிலையில், மே 13 தீர்ப்பு வழங்கப்படும் என நீதிமன்றம் அறிவித்தது. இதன்படி, இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினி தீர்ப்பு அளித்தார். அப்போது அவர் குற்றம் சாட்டப்பட்ட 9 பேரும் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது நிரூபிக்கப்பட்டுள்ளது. 9 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்தார். அரசுத் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், குற்றம் சாட்டப்பட்ட 9 பேரும் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது நிரூபணம் ஆகியுள்ளது. குற்றவாளிகளுக்கு சாகும் வரை தண்டனை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

சாகும் வரை ஆயுள் தண்டனையை எதிர்த் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இளம் வயதினராக இருப்பதனாலும், திருமணம் ஆகாதவர்கள் என்பதாலும் தண்டனையை குறைத்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். மேலும் குற்றம் சாட்டப்பட்டுள்ள இளைஞர்களின் தாய் தந்தை வயதானவர்களாக இருக்கிறார்கள், அவர்களை கவனிக்க வேண்டும் என்பதால் தண்டனையை குறைத்து வழங்க கோரிக்கை வைத்தனர்.

நேற்று முன்தினம் மதியம் 12.00 மணிக்கு நீதிபதி நந்தினிதேவி தீர்ப்பின் தண்டனை விவரங்களை வெளியிட்டார்.

அதில் குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து உத்தரவிட்டார். முன்னதாக சேலம் சிறையில் இருந்து குற்றவாளிகள் 9 பேரும் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மேலும் நீதிமன்ற வளாகம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### தண்டனை விவரம்!

முதல் குற்றவாளி சபரிராஜனுக்கு 4 ஆயுள் தண்டனையும், இரண்டாம் குற்றவாளி திருநாவுக்கரசுவுக்கு 5 ஆயுள் தண்டனைகளும். மூன்றாம் குற்றவாளி சதீஷுக்கு 3 ஆயுள் தண்டனைகளும், நான்காம் குற்றவாளி வசந்த குமாருக்கு 2 ஆயுள் தண்டனைகளும், ஐந்தாம் குற்றவாளி மணி என்ற மணிவண்ணனுக்கு 5 ஆயுள் தண்டனைகளும். ஆறாம் குற்றவாளி பாபுவுக்கு ஒரு ஆயுள் தண்டனையும், ஏழாம் குற்றவாளி ஹரோன் பாலுக்கு 3 ஆயுள்தண்டனைகளும், எட்டாம் குற்றவாளி அருளானந்தத்திற்கு 1 ஆயுள்தண்டனையும், ஒன்பதாம் குற்றவாளி அருண் குமார் என்ற அருணுக்கு 1 ஆயுள்தண்டனையும் விதித்து நீதிபதி நந்தினி தேவி தனது தீர்ப்பில் குறிப்பிட்டதுடன் குற்றவாளிகளுக்கு அபராதத் தொகை விதித்தும் அதிரடி உத்தரவிட்டுள்ளார்.

## மானமிருந்தால் 'சார்'கள் வெட்கித் தலைகுனியட்டும்!

### பொள்ளாச்சி பாலியல் வழக்கு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, மே 15–


எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியின்போது நடைபெற்ற பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. கைதான அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை அறிவிக்கப்பட்டதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் மானமிருந்தால் 'சார்'கள் வெட்கி தலை குனியட்டும் என்று பதிவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பொல்லாத அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட குற்றவாளிகளால் நிகழ்த்தப்பட்ட பெருங்கொடுமைக்கு நீதி கிடைத்திருக்கிறது!**

**அ.தி.மு.க. குற்றவாளி அடங்கிய கூடாரத்தைப் பாதுகாக்க முயற்சித்த 'சார்'கள் மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




---

## பா.ஜ.க.வே நிரந்தரமாக நாட்டை ஆளப்போவதில்லை!

# சர்வாதிகாரப் போக்கை காலம் தூக்கி எறியும்!

## "இந்துஸ்தான் டைம்ஸ்" நாளிதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, மே 15 -**

**பா.ஜ.க.வே நிரந்தரமாக நாட்டை ஆளப் போவதில்லை என்றும் சர்வாதிகாரப் போக்கை காலம் தூக்கி எறியும் என்றும் 'இந்துஸ்தான் டைம்ஸ்" நாளிதழுக்கு அளித்த பேட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழின் சிறப்பு செய்தியாளர் திவ்யா சந்திரபாபுவிற்கு அளித்த பேட்டி வருமாறு:-



**செய்தியாளர்:** தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் நீங்கள் பெற்ற சட்ட வெற்றியின் அரசியல் முக்கியத்துவம் என்ன, நாடு முழுவதும் உள்ள ஆளுநர்கள் மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க காலக்கெடுவை நிர்ணயிப்பது குறித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு குறித்து?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** மாநில உரிமைகளுக்கான சட்டப் போராட்டத்தில் உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு என்பது ஒரு மைல்கல். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும் உறுப்பினர்களையும் கொண்ட சட்டமன்றத்தின் தீர்மானம்தான் வலிமையானது. நியமனப் பதவியில் இருக்கும் ஆளுநர் என்பவர் சட்டமன்றத்தில் நிறைவேறிய மசோதாவுக்கு ஒப்புதலளிக்கக் கடமைப்பட்டவர் என்பதை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்துள்ளது.

சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட மசோதாவுக்கு ஒப்புதலளிக்காமல் காலவரையின்றி ஆளுநர் மாளிகையில் கிடப்பில் போட்டு வைப்பதோ, தன்னுடைய அதிகார வரம்பை மீறி ஆளுநர் அதை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பதோ சட்டவிரோதம் என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய காலக்கெடு குறித்து உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருப்பது, நமது அரசமைப்புச் சட்டத்தின் மாண்பைக் காப்பாற்றியிருக்கும் அம்சமாகும்.

Hindustan Times

### ஜனநாயக உரிமைகள் மீது வெளிச்சத்தை பாய்ச்சியுள்ள தீர்ப்பு!

தமிழ்நாடு அரசின் வழக்கில் கிடைத்துள்ள இந்தத் தீர்ப்பு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் ஜனநாயக உரிமைகளின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சியுள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்